5th March 1969]

Children's Theatre in Government Estate.

* 123 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) the income derived from the Children's Theatre in Government Estate, Madras, during the financial years 1965-66. 1966-67 and 1967-68 respectively; and

(*b*) the expenditure for each year ?

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை கவர்ன்மெண்ட் எஸ்டேட்டிலுள்ள குழந்தைகள் தியேட்டரில் 1965-66, 1966-67, 1967-68-ஆம் நிதி ஆண்டுகளில் தனித்தனியே கிடைத்த வருமானம் எவ்வளவு?

(இ) ஒவ்வொரு ஆண்டுக்கும் ஆன செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) & (இ)

1965–66	35,421·15	37,565·69
1966–67	39,250·16	44,050·78
1967–68	38,204·99	46,353·52

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இதற்கு அருகேயுள்ள சினிமா தியேட்டர்களில் வருமானத்தைக் கணக்கிட்டால் ஒவ்வொரு நாளும் ஆயிரம் முதல் மூவாயிரம் வரையில் அதிகமாகக் காணப்படுகிறது. அத்துடன் வாடகைக்கும் விடுகிறார்கள். ஒரு தியேட்டர் ரூ. 4½ லட்சம் வருமானமுள்ளதாகக் கூறுகிறார்கள். அப்படியிருக்கும்போது சர்க்கார் படங்கள் இலவசமாகக் காட்டினாலும் கூட, நஷ்டம் அதிகமாக இருப்பதால், இதைக் குறைக்கும் அளவுக்கு வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எதிர்க் கட்சித் தலைவரைப் போலவே நானும் வியப்படைந்து கொண்டிருக்கிறேன். நஷ்டம் இல்லாமல் பார்க்கும் முறையில் சில ஏற்பாடுகளைச் செய்யக் கருதிக் கொண்டிருக்கிறேன்.

THIRUMATHI S. MANJUBHASHINI: Sir, is the Hon. Minister aware that the Children's Theatre was originally intended to become a centre for children and it was not with the profit motive that it was constructed ? The then Prime Minister of India came specifically to open the Children's Theatre as a Children's centre to be used for all children's functions.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது லாபத்தை நோக்கி நடைபெறவில்லை என்றாலும், சிறுவர்களுக்கு மாத்திரம் இந்த அரங்கம் இருப்பதாக இருந்தாலும், தினந்தோறும் சிறுவர்களுக்கு உபயோகப்படுத்துவதில்லை. அவர்கள் உபயோகிக்காத நேரத்தில் லாபகரமாக இருக்க வேண்டுமென்றுதான் இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன்: மதுரையில் விக்டோரியா ஹால் என்று இருக்கிறது. அது வாடகைக்கு விடப்படுகிறது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் பொதுக் காரியங்களுக்கு

[5th March 1969

விட்டுவிட வேண்டுமென்ற கண்டிஷன் பேரில் வாடகைக்கு விடப் படுகிறது. அப்படிக் குழந்தைகளுக்கு ஞாயிற்றுகிழமை தோறும் [illegible]த்துக் கொள்வது என்றால் [illegible], விடுவ தென்றால் [illegible] லட்சக்கணக்கா[illegible] கிடைக்கும். அதை அரசு ஆ[illegible]யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : லாபகரமான யோசனையை சொல்லும்போது அதைப் பரிசீலிக்காமல் அரசு இருக்குமா?

THIRUMATHI S. MANJUBHASHINI : Sir, there was a proposal with the State Government to develop this as a Children's museum and a children's play centre with library and other facilities attached, this being in the heart of the City. May I know from the Hon. the Chief Minister what happened to that proposal?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவைகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் படி இப்போது ஆய்வில் இருந்து வருகின்றன.

Books of Subramania Bharathiar.

***124 Q.—THIRU N. R. THIAGARAJAN :** Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of editions published up to 31st March 1968 by the Tamil Nadu Government of the books of Subramania Bharathiyar ;

(*b*) the number of copies sold in each edition ; and

(*c*) the amount of profit gained or loss sustained thereby?

பாரதியார் நூல்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) திரு. சுப்ரமணிய பாரதியார் அவர்களின் நூல்களை தமிழக அரசு 31—3—1968 வரை எத்தனை பதிப்புகள் அச்சிட்டு வெளியிட்டது?

(இ) எத்தனை பிரதிகள் ஒவ்வொன்றிலும் விற்பனையாயின?

(உ) இதில் லாபம் அல்லது நஷ்டம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) அரசாங்க அச்சகம் ஐந்து புத்தகங்களை மட்டுமே முதல் வெளியீடாக அச்சிட்டு வெளியிட்டது.

(இ) (i) [illegible]ப்பெரும் பாட[illegible] என்ற நூல் எத்தனை பிரதி கள் வி[illegible]ன என்பது தெரியவில்லை.

( ) பாரதி நூல்கள் (கதைகள்) தொகுதி 187 பிரதிகள்.

(iii) பாரதி நூல்கள் (தத்துவம்) தொகுதி 160 பிரதிகள்.

( ) பாரதி நூல்கள் (சமூகமும் சமயமும்) தொகுதி 199 பிரதிகள்.